**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை. அது என்னுடைய ஆய்விலே உள்ளது. (குறுக்கீடு) நீங்கள் அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.* Time limit *எல்லாம் சொல்லி என்னிடம் கேட்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, அதற்கு* time *எல்லாம் கிடையாது. அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதற்குத் துறையிலேயிருந்து பதில் வந்தவுடன், அது எடுத்துக்கொள்ளப்படும். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதுபோன்றெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.*

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தனது ஆளுகையின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்திலிருந்து 10 மைல் தொலைவில் 285 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தீவு கச்சத் தீவு. இருபதாம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் இந்தத் தீவில் புனித அந்தோணியார் தேவாலயத்தை அமைத்தார். இங்கு ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை இராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக கச்சத் தீவு இருந்ததற்கான வரலாற்று ஆவணங்கள் உள்ளன. சுதந்திரம் அடைந்த பின்பு, ஜமீன் முறை ஒழிக்கப்பட்டு, இராமநாதபுரம் சமஸ்தானத்தில் இருந்த கச்சத் தீவு இந்திய நாட்டுடன் இணைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு இந்தியா–இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் வரை தமிழக மீனவர்கள் பாக்ஜலசந்தி பகுதியில், கச்சத் தீவு பகுதியில் மீன்பிடித்து வந்தனர். வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக்கவும் கச்சத் தீவினைப் பயன்படுத்தி வந்தனர். 1974 ஆம் ஆண்டு இந்தியா–இலங்கை ஒப்பந்தத்திலும் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள்*

*இந்திய மீனவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. இருப்பினும், இந்திய மீனவர்கள் பாக்ஜலசந்தி பகுதியில், கச்சத் தீவு பகுதியில் மீன் பிடிக்கவோ, கச்சத் தீவில் ஓய்வெடுக்கவோ இலங்கை அரசாங்கம் அனுமதிப்பதில்லை. எல்லை மீறினார்கள் எனத் தெரிவித்து, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பல சமயங்களில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்; சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; பல நேர்வுகளில் கைதும் செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே வருகிறது.*

*தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை இலங்கை நாட்டிடமிருந்து திரும்பப் பெறுவதே என்பதால், இது குறித்த முக்கிய தீர்மானத்தை நான் இப்பேரவையில் முன்மொழிய விழைகிறேன்.*

**தீர்மானம்**

*"தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினரின் கொடூரத் தாக்குதல்களும், துன்புறுத்துதல்களும், சிறை பிடிக்கும் நிகழ்வுகளும் தொடர்வதைக் கருத்தில் கொண்டும், 'பெருபாரி வழக்கில்' உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்பதாலும், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் இலங்கை நாட்டிற்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை தனது ஆளுகையின்கீழ் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகிறது" என்னும் தீர்மானத்தினை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவித்த பின்னர், எனது கருத்துகளை நான் எடுத்துரைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 மே 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை வழிமொழிவதிலே நான் உணர்வுபூர்வமாகப் பெருமைப்படுகிறேன். ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் புரட்டினால், அதில், நம்முடைய மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக, பிழைப்பிற்காக இலங்கை எல்லை ஓரமாக மீன்பிடிக்கப் போகும்போது, இலங்கை இராணுவம் 'அவர்கள் எல்லை தாண்டி வந்தார்கள்' என்று குற்றஞ்சாட்டி, மீனவர்களைக் கைது செய்துள்ளார்கள்; அவர்களைச் சிறையில் அடைத்துள்ளார்கள்; அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பன போன்ற செய்திகள் வாடிக்கையாக வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் செய்திக்கு, இந்த வேதனைக்கு, தீர்வு காணுகிற வகையிலே, தமிழகத்தினுடைய, தமிழக மக்களுடைய தன்மானத்தின் இலக்கணமாய், தலைநிமிர்வின் சின்னமாய் இருக்கக்கூடிய நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் உரிமைக்கும், பெருமைக்கும் காவல் அரணாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். 1991 ஆம் ஆண்டில் மாபெரும் வெற்றி பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திர தினத்தன்று கொடியேற்றியபோது, அந்தக் கொடியேற்று விழாவில், "கச்சத் தீவை நான் மீட்டெடுப்பேன்" என்று வீர கர்ஜனை புரிந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவேன் (மேசையைத் தட்டும் ஒலி)—முதலமைச்சராக வந்து முதல் முறையாக கொடியேற்றிய அந்த நிகழ்ச்சியிலே 1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தக் கோட்டை கொத்தளத்தில் நுழைந்தபோதே முழங்கியவர்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

*முற்பகல் 11–25*

*முதலமைச்சராக இருந்தபோது மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 2008–லே உச்ச நீதிமன்றத்திலே தாமாகவே ஒரு பொது நல வழக்கைப் போட்டவர்கள்.*

(மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை இலங்கைக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது தவறு, இந்திய இறையாண்மைக்கே அது இழுக்கு, தமிழர்களுடைய உரிமையை இப்படித் தாரைவார்த்துத் தந்தது தவறு என்று தாமாகவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஒரு பொது நல வழக்கை உச்ச நீதிமன்றத்திலே தொடர்ந்தவர்கள் மாண்புமிகு நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து 1991–லே அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் பலமுறை விவாதம் நடந்திருக்கிறது; அதற்குப் பிறகு 2001–லே அவர்கள் முதலமைச்சராக வந்தபோதும் விவாதம் நடந்திருக்கிறது; மீண்டும் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தபோதும் மிகக் குறுகிய காலத்திலேயே இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தொடர்ந்து கச்சத் தீவை மீட்டெடுப்பதற்காக, கச்சத் தீவிலே நமக்கு இருக்கிற உரிமையை நிலைநாட்டுவதற்காக, அது இராமநாதபுரம் மன்னர் சேதுபதிக்குச் சொந்தமான தீவு; அதற்குப் பின்னாலே இந்திய அரசுக்கும், தமிழ் மண்ணுக்கும் சொந்தமான தீவு. அந்தத் தீவை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக, எப்படி காவேரிப் பிரச்சினைக்கு தொடர் போராட்டம் நடத்தி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளால் 'காவேரியைப் பெற்றுத்தந்த பொன்னியின் செல்வி' என்று பட்டம் பெற்றிருக்கிறாரோ, அதைப்போல 1960–லே உச்ச நீதிமன்றத்திலே மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த டாக்டர் பி.சி. ராய் அவர்கள் பெருபாரியைப் பெற்றெடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே போராடிப் பெற்றெடுத்ததைப்போல, கச்சத் தீவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக பெற்றெடுப்பார்கள். காவேரியைப் பெற்றெடுத்தவர், கச்சத் தீவையும் மீட்டெடுப்பார், தமிழகத்திற்கு வரலாறு சேர்ப்பார்.

1974–லே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடந்த அந்த ஒப்பந்தத்தின் வழியாக இலங்கைக்கு அந்தத் தீவு தாரைவார்க்கப்பட்டது. 1974–லே மத்தியிலே ஆண்டவர்கள், மாநிலத்திலே ஆண்டவர்கள் யார் என்பதை வரலாறு நன்றாக

2013 மே 3] [முனைவர்செ.கு. தமிழரசன்]

உணர்ந்திருக்கிறது. அப்போது அங்கேயும் வாய் திறக்கவில்லை, இங்கேயும் வாய் திறக்கவில்லை. ஒரு வருத்தத்தைத் தெரிவித்து தப்பித்துக்கொண்டார்களே தவிர, கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம், தமிழர்களின் உரிமை பறிபோவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று ஒருபோதும் அவர்கள் சொன்னதில்லை. வாய்மூடிக் கிடந்தார்கள். 1974—லே இங்கே முதலமைச்சராக இருந்தவர்கள் இங்கே விவாதம் நடந்தபோது பதிலளிக்கவில்லை. 'உங்களை ஆலோசித்தார்களா, உங்களை கலந்தாலோசித்தார்களா, உங்கள் ஒப்புதல் பெற்றார்களா' என்று இந்த அவையிலே கேள்வி வந்தபோது 'அப்படி வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம்' என்று சொன்னார்களே தவிர, வார்த்தை ஜாலங்களிலே விளையாடினார்களே தவிர, இந்த மண்ணின் உரிமையை நிலைநாட்டுவதற்கு, தமிழர் என்று சொல்கிறவர்கள், தமிழ்ப் பெருமை பேசுகிறவர்கள் கொஞ்சமும்கூட, ஓர் அசைவைக்கூட நிகழ்த்தாதபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991—லிருந்து இன்று வரையிலே காவேரியைப் போலவே, கச்சத் தீவிலும் இழந்த உரிமையை மீட்டெடுப்பதற்குப் போராடிக் கொண்டிருக்கிறார். இந்தப் போராட்டம் வெல்லும், (மேசையைத் தட்டும் ஒலி) இது வரலாற்றிலே ஒரு நிலைத்த வெற்றியைத் தரும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கிறவர்கள் தாரைவார்த்தாலும், இந்திய அரசு தாரைவார்த்தாலும், மீட்டெடுக்கிற அந்த மாபெரும் வலிமை பெற்ற பராசக்தியான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்கிற இடத்தில் அல்ல, போராடுகிற இடத்தில் அல்ல, அதைப் பெற்றுத் தருகிற அந்த மத்திய அரசுக்கே தலைமையேற்கிற ஒரு நிலைமை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாகும். அது காலத்தின் கட்டாயம், அந்தக் காலத்தின் கட்டாயம் வெற்றியின் நிச்சயம் என்று சொல்லி, வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய சொந்த நலன்களுக்காக, அவர்கள் பிழைப்புக்காக நில உடைமைமீது உரிமை கொண்டாடுகிற இந்திய கலாச்சார, பண்பாட்டு, வாழ்வியல் பழக்க வழக்க நிலை மிக வேகமாகப் பரவி இருக்கிற சூழ்நிலையில், நாட்டின் ஒரு வலிமையான பொதுச் சொத்தை மீட்டெடுப்பதற்காக ஒருவர் உச்ச நீதிமன்றத்தை நாடியும்,

[திரு. உ. தனியரசு] [2013 மே 3

அரசியலிலே தன்னுடைய எல்லா வகையான வலிமையை, ஆற்றலைப் பயன்படுத்தி இந்திய நாட்டின் அங்கமாக இருக்கிற கச்சத் தீவு என்கின்ற நம்முடைய தாய்த் தமிழ் நாட்டின் பாரம்பரிய சொத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று, தொடர்ந்து போராடி வருகின்ற ஒப்பற்ற தாய்த் தமிழ் சமூகத்தினுடைய ஒப்பற்ற ஆட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

கச்சத் தீவு 1882 வரை இராமநாதபுரம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதற்குப் பிறகு, கிழக்கிந்திய கம்பெனிக்கு கச்சத் தீவு லீசுக்கு ஒப்படைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, இராமேஸ்வரத்தினுடைய வருவாய்க் கிராமமாக கச்சத் தீவு இருந்தது. அந்தக் கச்சத் தீவு 285 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அது இராமேஸ்வரத்திலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. அது சென்னை சென்ட்ரல் தொடர் வண்டி நிலையத்திலிருந்து தாம்பரம் செல்கின்ற அளவைவிடக் குறைவான இடைவெளியாகும். அவ்வளவு அருகில் இருக்கின்ற இந்தியாவினுடைய தாய்த் தமிழ்நாட்டினுடைய சொத்தை, மதிப்புமிக்க சொத்தை, பாதுகாப்பு அரணுக்காக, வலிமையாக, இந்தியாவினுடைய பரம்பரையைப் பாதுகாக்க வேண்டிய சொத்தாக இருக்க வேண்டிய அந்தச் சொத்தை 1974–ல் வடக்கத்திய ஆட்சியாளர்கள் மிகச் சாதாரணமாக அவர்களுடைய வீட்டுச் சொத்தைப்போல கச்சத் தீவை, இப்போது வரை தொடர்ந்து இந்தியாவை, தமிழர்களை நேசிக்காத இலங்கை அரசிடம், நம்முடைய எதிரிகளிடத்தில் கொடுத்துவிட்டார்கள். இந்திய அரசு 1974–ல் கச்சத் தீவை தாரைவார்க்கிறது. 1974–ல் இலங்கைக்கு கச்சத் தீவை தாரைவார்த்ததை எதிர்த்த, கண்டித்த ஒரே ஒப்பற்ற தமிழன் அப்போதைய இராமேஸ்வரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.கே. மூக்கையா தேவர் அவர்கள்தான். அது இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு உகந்தது அல்ல, தமிழக மீனவர்களுடைய நலன்களுக்கு, வருங்காலத்தில் அவர்களுடைய பிழைப்பிற்கு, வாழ்வுரிமைக்கு, உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று 1974–லே கண்டித்த ஒரே உறுப்பினர் திரு. மூக்கையா தேவர் மட்டும்தான். அவர் நாடாளுமன்றத்தில் எதிர்த்து தனது கருத்தைப் பதிவு செய்தார். அவர் 1974–ல் தனது கருத்தை நாடாளுமன்றத்தில் பதிவு செய்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு

2013 மே 3] [திரு. உ. தனியரசு]

1983—ல் கச்சத் தீவு வரை சென்ற தாய்த் தமிழ் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குகிறார்கள். 1984—ல் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அப்பாவி மீனவர் முனுசாமி என்பவர் இலங்கைக் கடற்படையினரால் முதன் முதலாக படுகொலை செய்யப்படுகிறார். திரு. மூக்கையா தேவர் எப்படி ஐயுற்றாரோ அதுபோலவே இந்தியாவிற்குச் சொந்தமான கச்சத் தீவை, அவர்களுக்கு தாரைவார்க்கப்பட்ட, பரிசாக கொடுக்கப்பட்டதைக்கூட, அவர்கள் பெருந்தன்மையாக எடுத்துக்கொள்ளாமல், தமிழக மீனவர்களை மிகச் சாதாரணமாக 1984—லேயே சுட்டுக் கொன்றார்கள். 1984—லிருந்தும், அதற்கு முன்பும், அதற்கு பின்பும் 1989 வரை தமிழகத்தில் ஆட்சியிலிருந்த கருணாநிதி, தமிழர்களுக்காகவே தான் பிறந்து, வாழ்ந்து வளர்ந்ததைப்போன்று தொடர்ந்து சொல்லி வருகின்ற கருணாநிதி சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ, நீதிமன்றத்திலோ கச்சத் தீவை மீட்பதற்கு, தமிழ் மீனவர்களை மீட்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991—ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, (மேசையைத் தட்டும் ஒலி) 1994—ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டும், இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டுமென்று முதன் முதலாக மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்தார்கள்.

இரண்டாவது முறையாக 2001—2006 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2004—ல் பாரதப் பிரதமருக்கு கச்சத் தீவு சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதி இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்து, கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டுமென்று நினைவூட்டி, வேண்டுகோளாக ஒரு கடிதம் அனுப்பினார்கள். தான் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதபோதும்கூட, ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் தன்னுடைய குடும்பத்திற்காக, தன்னுடைய வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக சிந்தித்த வேளையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வேதா நிலையத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திலே ஒரு பொதுநல வழக்கைத் தொடுத்தார்கள். அவரவர்கள் சொந்தப் பிரச்சினைக்கு வழக்கைத் தொடுத்து, தங்களுடைய சொத்தைப் பாதுகாப்பதற்கு, உரிமைக்காகப் போராடி, சுகபோகத்திற்காக வழக்கு தொடுக்கும் காலத்தில், இந்தியாவினுடைய, தமிழர்களுடைய சொத்தை, தமிழ் மீனவர்களுடைய உயிரைப் பறிப்பதற்கு இலக்காக இருக்கிற இந்த மண்ணை, மதிப்புமிக்க கச்சத் தீவு மண்ணை மீட்டெடுக்க

வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கைத் தாக்கல் செய்தார்கள். அந்த பொதுநல வழக்கில் இந்திய—இலங்கை கச்சத் தீவு சம்பந்தமான ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு காரணத்தைச் சொன்னார்கள். அதாவது, கச்சத் தீவை இந்தியா தாரைவார்த்தபோது, நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய இரண்டு அவைகளையும் கூட்டி முடிவு செய்யப்படவில்லை, அந்த அவைகளின் ஒப்புதலையும் பெறவில்லை. ஆகவே, உச்ச நீதிமன்றம் இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டுமென்று வலிமையான, ஆதாரப்பூர்வமான, சட்டப்படியும், தார்மீக இயற்கை நியதியின்படியும் அந்த வாதத்தை முன்வைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உச்ச நீதிமன்றத்தினுடைய கவனத்தை ஈர்த்து அதனுடைய கதவைத் தட்டி அந்த வழக்கைப் பதிவு செய்தார்கள்.

முற்பகல் 11—35

ஏழு கோடி தமிழர்கள், அதாவது தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களும் குடும்பம் குடும்பமாக வாக்களித்து மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011—ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனே வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைச் சட்டமன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) தான் தொடர்ந்த வழக்கிலே தமிழகத்தினுடைய வருவாய்த் துறையையும் அந்த வழக்கிலே இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டுமென்றும் இதே சட்டமன்றத்திலே தீர்மானத்தை ஆண்மையோடு கொண்டுவந்தார்கள்.

நம்முடைய தமிழகத்தினுடைய கோரிக்கைகளுக்கு எப்படி மத்திய அரசு செவி சாய்க்கவில்லையோ அதைப்போன்று தமிழகத்தினுடைய கோரிக்கைகளை மட்டுமல்ல; அந்தத் தீர்மானத்திற்கும் செவி சாய்க்கவில்லை. இப்போது லடாக்கிலே சீனத்தினுடைய ஊடுருவல். மிகப் பகிரங்கமாக சீனா ஊடுருவி இருக்கிறது. இந்தியாவினுடைய எல்லைக்குள்ளே வந்து அவர்கள் ரொம்ப சௌகரியமாக பிரியாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பல்வேறு எல்லைப் பகுதிகளிலும் அச்சுறுத்தல் இருக்கிறது. ஆனால், இந்திய ஆட்சியாளர்கள் வலிமையான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

2013 மே 3] [திரு. உ. தனியரசு]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014–லே பாரதத்தினுடைய ஆட்சித் துறைத் தலைவராக வரப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கச்சத் தீவை மட்டும் மீட்கப் போவதில்லை, இந்தக் கச்சத் தீவை மீட்பதோடு மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) லடாக்கிலே ஊடுருவி இருக்கும் சீனாவையும் அப்புறப்படுத்திவிட்டு இந்திய மண்ணைப் பாதுகாக்க வேண்டுமென்றால் ஆண்மையுள்ள ஆட்சித் துறைத் தலைவர் மக்களையும், மண்ணையும் நேசிக்கக்கூடிய ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவராக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வரவேண்டும். அம்மா பிரதமர் ஆனார்கள் என்றால் பாகிஸ்தானில் சிங் இறந்திருக்க மாட்டார். மன்மோகன்சிங், சோனியா இருக்கும்போது திகார் சிறையில்கூட நமக்குப் பாதுகாப்பு இல்லை. அப்படியென்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டும் என்பதை வெறும் அரசியலுக்காக மட்டுமல்ல; தமிழர்களுடைய உரிமைகளுக்காக 7 கோடி தமிழர்களுடைய உரிமை பறிபோகிறது என்று அவர்கள் இப்படி ஒரு வலிமையான தீர்மானத்தைக் கொண்டு வந்து கச்சத் தீவை மீட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 1984–லே முனுசாமி என்கின்ற ஒரு மீனவர் கொல்லப்பட்டார். தொடர்ந்து 3,000 தாக்குதல்கள் தமிழக மீனவர்கள்மேல் நடத்தப்பட்டிருக்கின்றன. 3,000 படகுகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. 400–க்கும் மேற்பட்ட அப்பாவி மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் படுகொலையை நிகழ்த்திய இலங்கையை, இலங்கை இராணுவத்தைத் தட்டிக் கேட்பதற்குத் திராணியில்லாத மத்திய அரசின் போக்கை வலிமையில்லாத மத்திய அரசைக் கண்டிக்க வேண்டும். மத்திய அரசிடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தின்வழியாக கோரிக்கைகளை வைத்தது கச்சத் தீவை மீட்டுத் தருவதற்காக இல்லை, ஏற்கெனவே, போனவாரம்கூட லடாக்கை விட்டவர்கள், 1974–லே தாரைவார்த்த இலங்கையினுடைய கச்சத் தீவை மீட்பார்களென்று நம்பவில்லை. இருந்தாலும்கூட, நாட்டு மக்களுக்கும், உலகத்திற்கும் இதை ஒரு வரலாற்றாகப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக இந்தப் பதிவை நாம் செய்திருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014–ல் ஆட்சித் துறைத் தலைவராக வருகின்றபோது கச்சத் தீவு கண்டிப்பாக மீட்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்கின்றவரை தமிழர்களுடைய இந்தப் பாரம்பரிய

[திரு. உ. தனியரசு] [2013 மே 3

வரலாற்றுச் சிறப்புமிக்க மிக முக்கியமான இந்தக் கச்சத் தீவை— அதே சீனா இன்னும் இலங்கையிடம் நெருக்கமாக உறவாட இருக்கிறது. அதே சீனா கச்சத் தீவு இடத்திற்கு வந்தால் வடநாட்டிலே இருக்கிற மக்களுக்கு பாதிப்பு இருக்கிறதோ, இல்லையோ தாய்த் தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான நம் தாய்த் தமிழ் சமூகத்திற்கு ஓர் அச்சுறுத்தல் வந்துவிடுமோ என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்னமும் கூடுதல் கவனமாகக்கூட அந்தக் கச்சத் தீவை—மீட்டு, இந்தியாவினுடைய காவல் அரண் என்ற எல்லையை விரிவுபடுத்துவதற்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 கோடி தமிழ்ச் சமூகத்திற்காக மட்டுமல்ல, பாரத தேசமெல்லாம் பரவிக்கிடக்கின்ற சாமானிய மக்கள் 140 கோடிக்கும் மேற்பட்ட மக்களினுடைய வாழ்வுரிமையை, இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான தீர்மானம்தான் இன்று தமிழகத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானம் இந்தியாவிற்கும், உலகிற்கும் ஒரு வலிமை சேர்க்கின்ற ஜனநாயகரீதியான, தார்மீகரீதியான வலிமையான தீர்மானமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்று, பாராட்டி, ஆதரித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கச்சத் தீவை மீண்டும் பெற்று இந்தியாவோடு சேர்க்க வேண்டுமென்ற நல்ல சிந்தனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள்.*

*முற்பகல் 11–40*

*தமிழக மீனவர்கள் தினமும் படுகின்ற அல்லல்களை, மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொலை செய்யப்படுவதைப் பத்திரிகைகளில் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த*

2013 மே 3] [திரு. பி.வி. கதிரவன்]

நிலையை மாற்ற வேண்டும் என்றுதான் 1974–லே மத்தியிலே அன்றையதினம் பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் இந்தக் கச்சத் தீவைத் தாரைவார்த்து பாராளுமன்றத்திலே சொன்னபொழுது எங்களது பார்வர்டு பிளாக் இயக்கத்தினுடைய தலைவர் மரியாதைக்குரிய மூக்கையா தேவர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்து இந்தக் கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்தால் நிச்சயமாக நமது தமிழக மீனவர்கள் மிகவும் பாதிப்படைவார்கள், வருங்காலத்தில் இந்தியாவின்மீது போர் தொடுக்கும் நிலைவரும் என்று எச்சரித்து அன்றையதினம் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் எங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர் என்ற பெருமை எங்களுக்கு உண்டு. ஆனால், அந்த நேரத்திலே டாக்டர் கலைஞர்தான் தமிழகத்திலே ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். ஆனால், பாராளுமன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். ஆனால், ஒருவர்கூட வாய்திறந்து அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நமது தமிழக மீனவர்கள் பாதுகாக்கப்படவில்லை. மத்திய அரசு தமிழக மீனவர்களுக்கு, எதிராக கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்துள்ளது. இலங்கையிலிருக்கின்ற தமிழர்களையும் காப்பாற்றாமல் மத்திய அரசு பாராமுகமாக இருந்துவருகிறது. இந்தப் பாராமுகத்தைத் திருப்பவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதாவது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்பொழுதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கும்பொழுதே உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, கச்சத் தீவை மீண்டும் இந்தியாவிற்குப் பெறவேண்டும் என்பது மாண்புமிகு முதல்வருடைய சீரிய திட்டம். 1974, 1976 ஒப்பந்தங்களை இரத்து செய்துவிட்டு கச்சத் தீவை மீண்டும் இந்தியாவுடன் இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது முறை தமிழகத்தினுடைய முதல்வராக வந்த பின்பு தமிழக வருவாய்த் துறையை அந்த வழக்கிலே சேர்க்கச் சொல்லி இதே சட்டமன்றத்திலே 9–6–2011–லே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்

எப்படியும் கச்சத் தீவை மீட்டேத் தீரவேண்டும் என்பதற்காக இன்று சட்டமன்றத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து கச்சத் தீவைத் தமிழகத்திடம் மத்திய அரசு ஒப்படைக்கவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல வெற்றிகளைத் தந்திருக்கிறார்கள். தமிழகத்து மக்களை மனதில் வைத்து அந்த மக்களுக்குச் செய்யவேண்டிய அனைத்து நன்மைகளையும் தொடர்ந்து செய்துவருகின்ற, சாதனை தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கச்சத் தீவு விஷயத்திலும் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்ததை எங்கள் அகில இந்திய பார்வர்டு பிளாக் வழிமொழிந்து, சொல்லப்போனால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒட்டுமொத்தமாக இதற்கு ஒப்புதலளித்து வழிமொழியவேண்டுமென்று கேட்டு நிறைவு செய்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு மீட்கப்பட வேண்டும். அது எதற்காக மீட்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் தெள்ளத்தெளிவாக இந்த மாமன்றத்திலே சிறப்பான ஒரு தனித் தீர்மானத்தின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்த மாமன்றத்திலே 9–6–2011 அன்று கச்சத் தீவு தொடர்பான வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறையையும் சேர்த்துக்கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கச்சத் தீவை எதற்காக மீட்கவேண்டும்? நமது மீனவ சகோதரர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போதெல்லாம் அடிக்கடி கொன்று குவிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தது மட்டுமல்லாமல் கச்சத் தீவு யாருடையது என்பதையெல்லாம் இந்தத் தீர்மானத்தை முன்மொழியும்போதே*

2013 மே 3] [திரு. ரா. சரத்குமார்]

இராமநாதபுர சேதுபதி மன்னர்கள் காலத்திலிருந்து இது அவர்களுக்குச் சொந்தமான இடமாகத்தான் இருந்துவந்திருக்கிறது. 1947-ல் கொண்டு வரப்பட்ட ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகுதான், அது அரசுடைமையாக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்தச் சான்றுகளைப் பார்க்கும்போது இலங்கை அரசின் வரைபடங்களை 18 ஆம் நூற்றாண்டிலிருந்து பார்த்துக்கொண்டே வரும்போது, இலங்கைக்குச் சொந்தமானது கச்சத் தீவு என்பது தேசத்தின் வரைபடத்தில் எந்தவொரு இடத்திலும் இடம்பெறவில்லை என்பது உறுதியாகிறது. ஆக, கச்சத் தீவு நம் நாட்டுக்குச் சொந்தமானது. அதுவும் முக்கியமாக தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. தமிழ்நாட்டு இராமநாதபுரம் மன்னர்களுக்குச் சொந்தமானது என்ற அடிப்படையில் ஒரு பாரம்பரியமிக்க கச்சத் தீவை அவர்கள் தாரைவார்த்தது 1974 ஆம் ஆண்டு. பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அவர்களுக்கு அன்று இருந்த சில நிர்ப்பந்தத்தின் காரணமாக, சிலர் ஜனாதிபதியாக இலங்கையில் வர வேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டும், இதைத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், ஒரு நாட்டுக்குச் சொந்தமான எந்தவொரு பகுதியினையும், தாரைவார்க்க வேண்டும், பிறருக்குக் கொடுக்க வேண்டும், அதற்கு இரு அவைகளையும் கூட்டி அதில் சட்டத்தினை Constitution Amendment has to be made, then it has to be ratified in the both houses of the Parliament இரண்டு அவைகளிலும் அதற்கு ஒப்புதல் அளித்த பிறகுதான் தாரைவார்க்க முடியும் என்று அனைவருக்கும் தெரியும்.

முற்பகல் 11–45

1960 ஆம் ஆண்டு பெருபாரி நிகழ்ச்சியை சுட்டிக்காட்டி, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தி அவர்கள் இந்தக் கச்சத் தீவை தாரைவார்த்து இருக்கிறார்கள் என்பது இங்கே உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அந்தச்சமயத்தில் இங்கு ஆட்சியில் இருந்தவர்கள் அதை எதிர்க்கவில்லை என்பதை இங்கே சகோதரர்கள் எல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். நானும் அதை வலியுறுத்துகிறேன். ஏனென்றால், எதையும் அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் மட்டும் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், அதற்கும் சில நாடகங்களையெல்லாம்

[திரு. ரா. சரத்குமார்] [2013 மே 3

ஆடுவார்கள். அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், அதை ஆழமாகச் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. போராட வேண்டியதற்கு அவர்கள் போராடுவதில்லை. போராடுவதுபோல் நடிப்பார்கள். போராட்டம் தோற்றுவிடும் என்ற சூழ்நிலையிலே வெளியிலே வந்துவிடுவார்கள். ஆக, கச்சத் தீவைப் பொறுத்தவரை அன்றும் சரி, இன்றும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறந்த முறையில் அதை மீட்க வேண்டும் என்ற எண்ணத்திலே பாடுபட்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதற்காக மீட்க வேண்டுமென்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குவடார் என்று பாகிஸ்தானில் ஒரு துறைமுகம் இருக்கின்றது. ஏற்கெனவே, இந்தச் சட்டமன்றத்தில் நான் எடுத்துரைத்திருக்கின்றேன். அங்கு சீனப் போர்க் கப்பல்கள் நிறுத்தப்படுகின்றன. மேற்குவங்கத்தில் உள்ள சிட்டகாங் பர்மாவிற்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டு அந்தத் தீவிலே சீனப் படகுகள், சீனக் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தற்போது, இராஜபக்சே அவர்களின் சொந்தத் தொகுதியான அம்பன்தோட்டாவில் சீனா ஒரு துறைமுகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. ஆக, இந்தியா சுற்றி வளைக்கப்பட்டிருக்கின்றது. தமிழகம் சுற்றி வளைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நமது நாட்டின் பாதுகாப்பிற்கு உலை வைக்கிறார்கள், தமிழகத்தின் பாதுகாப்பிற்கு உலை வைக்கிறார்கள் என்பதைச் சிறப்பாக உணர்ந்து, இந்தச் சூழ்நிலை தொடருமேயானால், நிச்சயமாக இது நாட்டிற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்குப் பாதுகாப்பின்மையை உருவாக்கிவிடும் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து, இதை இன்று நாம் செய்யாவிட்டால் யாருமே செய்யமுடியாது என்று ஆழமாகச் சிந்தித்து, எந்த ஒரு தலைவரும் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையிலே தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு Foreign policy என்று சொல்லும்போது, உலகமே சிரித்துக் கொண்டிருக்கின்றது. சரப்ஜித்சிங் இறந்திருக்கிறார் அங்கு. 1990 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டு—இன்னொசன்ட் என்று அவர் சொல்லியிருக்கிறார்—கதறியிருக்கிறார் நான் குற்றம் செய்யவில்லை, இரண்டு பாட்டில் விஸ்கி கையில் வைத்திருந்தேன் அவர் என்று சொல்லியது இன்று படித்த பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. இறந்த உடல் இங்கு வந்த பிறகு

2013 மே 3] [திரு. ரா. சரத்குமார்]

நீலிக்கண்ணீர்வடித்து கட்டித் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இறந்த உடல்கள் எல்லாம் தமிழகத்திற்கு வந்து சேரக்கூடாது என்ற எண்ணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றே சிந்தித்து, சீனப் படைகள் தாக்குகின்ற சூழ்நிலை நமது தமிழகத்திற்கு வந்துவிடக்கூடாது, நமது நாட்டின் பாதுகாப்பு சீரழிக்கப்படக்கூடாது என்பதை உணர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற சிறப்பான ஒரு தீர்மானத்தை, அனைவரும் உணருகின்ற தீர்மானத்தை, ஏனென்றால், இங்கே அன்புச் சகோதரர் திரு. தனியரசு சொல்லியதுபோல் திராணியல்லாத மத்திய அரசு என்று சொன்னா. உண்மைதான். நமது நாட்டின் பாதுகாப்பைக் கருதி அவர்கள் ஆட்சி நடத்தவில்லை. ஆகவே, நல்லதொரு பாரதப் பிரதமர் வந்துகொண்டிருக்கிறார்கள். 2014—லே நிச்சயமாக வரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உறுதி படைத்தவர்கள், நேர்மையானவர்கள், ஆற்றல்மிக்கவர்கள் இந்த நாட்டை ஆள வேண்டும். மக்களைப்பற்றிச் சிந்திப்பவர்கள், மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பவர்கள், தொலைநோக்குப் பார்வையுடன், தொலைநோக்குச் சிந்தனையுடன் நாளை தமிழகத்திலே என்ன நடக்கும், நாளை இந்தியாவில் என்ன நடக்கும், தமிழகத்தின் ஒவ்வொரு குக்கிராமத்திலும் என்ன நடக்கும் என்பதை விரல் நுனியில் வைத்துக்கொண்டு, மக்களுக்காக, தமிழக மக்களுக்காக, இந்திய மக்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே அர்ப்பணித்து, சிந்தித்துச் செயல்படுகின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை நாம் வரவேற்கவேண்டும், வாழ்த்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, இந்த நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, பாரதப் பிரதமராக வந்து இரும்புக் கரம் கொண்டு அனைத்தையும் அடக்க வேண்டும். அந்தச் சக்தி ஒருவருக்கு இருக்கின்றது என்றால், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் இருக்கின்றது என்பதை அண்மையில் நடந்த கலவரத்தில் அவர்கள் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். இரும்புக் கரம் கொண்டு நாம் அனைவரும் கண்டிக்கவேண்டும். இரும்புக் கரம் உள்ள மனம் கொண்டிருக்கவேண்டும். எடுக்கின்ற முடிவிலே ஒரு சக்தி இருக்கவேண்டும். அந்த சக்தி என்பது உண்மையாக இருக்கவேண்டும். அந்தச் சக்தியும், உண்மையும் இருக்கின்ற ஒரு இடம் என்றால் அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி

[திரு. ரா. சரத்குமார்] [2013 மே 3

அம்மா அவர்களிடம் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

இந்தக் கச்சத் தீவை மீட்பதால் நமது மீனவ சகோதரர்கள் நிச்சயமாகப் பாதுகாக்கப்படுவார்கள். நமது தமிழகம் பாதுகாக்கப்படும். நமது இந்திய இறையாண்மை பாதுகாக்கப்படும். நமது நாடு பாதுகாக்கப்படும். இந்தத் தீர்மானத்தை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தை முதற்கண் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். இந்திய நாட்டினுடைய எல்லைப் பகுதியாக இருந்து, 1974 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு தாரைவார்க்கப்பட்ட காரணத்தினாலே, தமிழ்நாட்டினுடைய இலட்சக்கணக்கான மீனவர்கள் தினமும் பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கு கடந்த 40 ஆண்டு காலமாக ஆளாகிவருகிறார்கள்.

மீனவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணக்கூடிய வகையிலே, ஏற்கெனவே இலங்கை அரசோடு போடப்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தை இரத்து செய்யவேண்டுமென்று இதே அவையிலே, 2011 ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே தொடுத்திருக்கக்கூடிய வழக்கிலே தமிழ்நாடு அரசையும் சேர்த்துக்கொள்கின்ற தீர்மானம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இப்போது அதற்கு செறிவூட்டக்கூடிய வகையில், அதை வலுப்படுத்தக்கூடிய வகையில், நேரடியாக வலுவான ஒரு தீர்மானம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின்மூலம், இலங்கை நாட்டிற்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை, தனது ஆளுகையின்கீழ் கொண்டுவர உடனடியாக நடவடிக்கை எடுக்க, அதாவது உடனடியாக அந்தக் கச்சத் தீவை இந்தியாவினுடைய ஆளுகைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற

2013 மே 3] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

நேரடியான இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படும்பட்சத்தில் மத்திய அரசு, இந்தத் தீர்மானத்தைத் தமிழக மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்துமேயானால், நம்முடைய கடல் எல்லையிலே தினம், தினம் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகிவரக்கூடிய இலட்சக்கணக்கான மீனவர்களுடைய வாழ்வு ஒளிபெறும். எனவே, அப்படிப்பட்ட இந்தத் தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

ஆனால், அதேசமயத்திலே ஓர் ஆலோசனை. ஆலோசனை மட்டுமல்ல கருத்து. அதாவது, இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு மட்டும் விட்டுவிடாமல் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்திய அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் தொடர்ந்து நாம் வலியுறுத்திக்கொண்டிருந்தால்தான் இதற்கெல்லாம் ஒரு தீர்வு கிடைக்கும். எனவே, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நிறைவேறுகின்ற வகையில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென்ற கருத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி, வரவேற்று விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள்மீதும், தமிழக மீனவர்கள்மீதும், அதிகம் அக்கறை கொண்ட அரசாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக அரசு, மூன்றாவது முறையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானங்களையெல்லாம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியிருக்கின்றார்கள். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கவேண்டுமென்றும், ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையம் கொண்டுவருகின்ற அந்தத் தீர்மானத்தை இந்தியா முன்மொழியவேண்டுமென்றும் பல்வேறு சிறப்புமிக்கத் தீர்மானங்களையெல்லாம் இந்த அவையிலே நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

இந்திய அரசு இலங்கையோடு நட்புகொண்டதே தவிர, இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2013 மே 3

முற்பகல் 11—55

இதுவரை மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 570 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் மிகப் பெரிய தாக்குதல்களுக்குள்ளாகி காயமுற்றிருக்கின்றார்கள். இலங்கை சிறையிலே இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள் சிறைபட்டிருக்கின்றார்கள். அவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இப்படித் தொடர்ந்து தமிழக மீனவர்களுக்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது இலங்கை அரசு. காவேரியாக இருந்தாலும் சரி, கச்சத் தீவாக இருந்தாலும் சரி, மீட்டதும், மீட்கப்போவதும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொண்டு, கச்சத் தீவையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மீண்டும் இந்திய ஆளுகையின் கீழ் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்று நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கச்சத் தீவை மீட்கவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். ஏனென்றால், நானும் தமிழன்தான். தமிழர்களிடத்தில் ஒற்றுமை இல்லையென்றுதான் நான் சொல்வேன். கேரளாவில் ஒரு பிரச்சினை வந்தால்—முல்லைப் பெரியாறு பிரச்சினை—Ruling Party—ஆக இருந்தாலும், Opposition Party—ஆக இருந்தாலும் இணைந்து தீர்மானத்தைப் போடுகிறார்கள், முட்டுக்கட்டையாக நிற்கிறார்கள். இது நம்முடைய வாழ்வாதாரப் பிரச்சினை. நம்முடைய மீனவர்கள் படுகிற கஷ்டங்களை உணர்ந்து, கச்சத் தீவை மீட்டாக வேண்டுமென்ற ஒரு முக்கியமான கருத்தை இந்த அவையிலே, வைத்திருக்கின்றார் அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது நம்முடைய கடமை. 1974—ல் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதம மந்திரியாக இருந்தார். உருக்கு

மனுஷி என்று போற்றப்பட்ட உத்தமத் தலைவி பண்டார நாயகாவோடு ஒப்பந்தம் போட்டபோது இதை வலியுறுத்தவில்லை. அது ஒரு பிரச்சினை இல்லை, அந்தப் பிரச்சினையில் அப்போது அப்ஜெக்ஷன் இல்லை. அப்போது இரு நாடுகளுக்கிடையே ஐக்கியம் இருந்தது. இன்று இருக்கக்கூடிய இலங்கை–இந்தியாவினுடைய உறவு வித்தியாசமாக இருக்கிறது. இலங்கையினால் நம்முடைய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இன்று இருக்கக்கூடிய முயற்சிகள் வித்தியாசமான முயற்சிகள். அதற்கு காங்கிரஸ் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புக்குரிய சகோதரர் திரு. தனியரசு அவர்களும், ஏனைய நண்பர்கள்கூட, மத்திய அரசு சரியில்லை, லடாக்கைப் பிடித்துவிட்டார்கள், சீனா நம்முடைய பகுதியைப் பிடித்துவிட்டது என்று மத்திய அரசை குறை சொல்கிறார்கள். நாம் சொல்லிக்கொள்ளலாம், நம்முடைய தமிழக முதல்வர் தமிழக மக்களைக் காப்பாற்ற எப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்கிறார்களோ அதைப்போல நம்முடைய பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் அந்த எண்ணத்தில் இருப்பார்கள். இந்த நாட்டில் இருக்கக்கூடிய எந்த மனிதனும் தன்னுடைய அதிகாரத்தை விட்டுகொடுப்பதற்குத் தயாராக இல்லை. அதைப் புரிந்துகொள்ளவேண்டும். பாராளுமன்றத்தில் இருக்கக்கூடியவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். பிரச்சினை வருகின்றபோது சும்மா இருப்பார்களா? இந்த நாட்டை எப்படி காப்பாற்றவேண்டுமென்று திட்டங்களைப் போடுவார்கள், செய்வார்கள் என்பதை நான் அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த, இந்த அற்புதமான வேண்டுதல் வரவேற்கக்கூடியது என்றும் நாங்களும் உடனிருப்போம் என்பதைச் சொல்லி, மீட்போம், அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வோம் என்று கூறிக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா–இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் இலங்கை நாட்டிற்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை தனது ஆளுகையின்கீழ் கொண்டுவர,

[திரு. எம். ஆறுமுகம்] [2013 மே 3

உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகின்றது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்கின்றது, வழிமொழிகின்றது. இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நட்புறவு நீடிக்கவேண்டுமென்பதற்காக மத்திய அரசு மாநில அரசின் கருத்துகளைக் கேட்டாலும் தமிழக மக்களுடைய உணர்வுகளுக்கு விரோதமாகக் கச்சத் தீவை இந்திய அரசு இலங்கைக்குத் தாரைவார்த்துவிட்டது. பாரம்பரிய உரிமைகள் தொடரவேண்டும் எனவும், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரைவார்த்தபோதிருந்த பாரம்பரிய உரிமைகள் தொடரவேண்டும். மாதா கோயிலுக்குச் சென்று வரவும், மீனவர்களின் வலையை உலர்த்தவும், பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உரிமைகள் வழங்கி இருந்தாலும், இலங்கை அரசு அனுமதிப்பதில்லை. தமிழக மக்களுடைய உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்பட்டுவிட்டன. மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சராக இருந்த மரியாதைக்குரிய ராய் அவர்கள் பெருபாரி வழக்கில் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தன் உரிமையை நிலைநாட்டியதைப் போல, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே கச்சத் தீவை மீட்க வேண்டுமென்பதற்காக உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, வருவாய்த் துறையையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே, இதே மாமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியபோது இந்திய கம்யூனிஸ்டு கட்சி அதை ஆதரித்தது, ஏற்றுக்கொண்டது.

நண்பகல் 12–00

இப்பொழுது நம்முடைய மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும் மத்திய அரசாங்கத்திற்குத் தொடர்ந்து கடிதங்களை எழுதுவது மட்டுமல்ல, மீனவர்கள் தாக்கப்படுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டாலும்கூட, 'செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல' மத்திய அரசில் இருக்கக்கூடியவர்கள் கண்டுகொள்வதே இல்லை என்ற நிலைதான் நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

2013 மே 3] [திரு. எம். ஆறுமுகம்]

*மீன் பிடிக்கும் தொழிலை உலகம் முழுவதும் உள்ள மீனவர்கள் செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள். நம்முடைய இந்தியாவில் இருக்கக்கூடிய ஆந்திரா மாநிலம், கேரள மாநிலத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மீன் பிடிப்பதற்குச் செல்கிறார்கள். சில சமயங்களில் எல்லையைக் கடந்து சென்று மீன்பிடிக்கக்கூடிய சூழல் ஏற்படுகின்றது. ஆனால், தமிழகத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் மட்டும் எல்லையைக் கடந்து சென்றதாகச் சொல்லி இலங்கைக் கடற்படையும், இலங்கை அரசாங்கமும் நம்முடைய தமிழக மீனவர்களை மட்டும் சுட்டுக் கொல்வது என்பது தொடர்கதையாக நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் அனுமதிக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். மற்ற எந்த நாடுகளிலும் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோதிலும் சரி, நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய மற்றவர்கள், இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்கின்ற போதும்சரி, படகுகளை எடுத்துக்கொள்வார்கள்; மீனவர்களை கைது செய்வார்கள்; பின்னர் விடுவித்துவிடுவார்கள். ஆனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்றபோது இலங்கை இராணுவம் அவர்களைக் கைது செய்வது மட்டுமல்ல, மீன்பிடிக்கச் சென்றாலும் எல்லையை மீறி வந்துவிட்டார் என்று சுட்டுக்கொல்வதும், மீன் வலைகளை அறுத்து நாசம் செய்வதும், படகுகளைச் சேதப்படுத்துவதும், மீன்களைக் கடலில் கொட்டுவதும், கொள்ளையடிப்பதுமான தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இலங்கை அரசு ஒரு காட்டுமிராண்டித்தனமான அரசு மட்டுமல்ல, அது மனித உயிர்களை பலி வாங்கும் அரசு என்று உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது. அது ஒரு நட்பு நாடே அல்ல. எனவே, இந்தத் தீர்மானம் சரியானது. மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, கச்சத் தீவை மீட்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கக்கூடிய தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி மனதாரப் பாராட்டுகிறது, வழிமொழிந்து அமைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களுடைய வாழ்வாதார பாதிப்புகள் தமிழக மக்களை வேதனைக் கடலிலே தள்ளிக் கொண்டிருக்கிறது. அன்றாடம் கொல்லப்படுவது, கைது செய்யப்படுவது,*

பிடிக்கப்பட்ட மீன்கள் சூறையாடப்படுவது, தாக்கப்படுவது என்பது நடந்த வண்ணம் இருக்கிறது. கச்சத் தீவை ஒப்பந்தத்தின் வழியாக இலங்கைக்கு ஒப்படைத்த பிறகும், நாம் பாரம்பரியமாக அதற்கு முன்பு, எங்கெல்லாம் மீன் பிடித்து வந்தோமோ, அங்கெல்லாம் மீன் பிடித்து வந்தோம். பாக் ஜலசந்தியிலே மீன் பிடித்து வந்தோம், இலங்கை நீர்ப்பரப்பிலே மீன் பிடித்து வந்தோம். 1974–க்கு பிறகு 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் அந்த நிலைமை நீடித்தது. இதுவொரு அனுபவ உரிமையாகவே தொடர்ந்தது. கச்சத் தீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தவில்லை. வலை காயப் போடுவதற்கு நமக்கு இருந்த உரிமை, மீன் பிடிப்பதற்கு இருந்த உரிமை–ஆகிய நமது உரிமைகளைத் தொடர்ந்து மறுத்தார்கள். இந்திய அரசு, இந்த எல்லா நேர்வுகளிலும் தலையிட்டு சீர்படுத்தவோ, நம்முடைய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்கவோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒரு வேதனையான விஷயம். கச்சத் தீவை இந்திய அரசு இலங்கைக்கு ஒப்படைத்தது தவறு; நமது நாட்டு சட்டப்படியே தவறு என்று ஏற்கெனவே 1960-லே வங்கத்தில் போடப்பட்ட வழக்கில் பெற்ற தீர்ப்பின் அடிப்படையிலே தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் என்கிற முறையிலே, தனிப்பட்ட முறையிலேயே வழக்கைத் தொடுத்து, அந்த வழக்கில் இப்போது தமிழக அரசும் அதனுடைய வருவாய்த் துறையும் இணைந்துகொண்டிருக்கிறது. இதே மன்றத்திலே நாம் இதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். நீதிமன்றத்திலே இந்த வழக்கு இருக்கிற காரணத்தினால், இது sub–judice என்று மத்திய அரசாங்கம் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது; அப்படிச் சொல்வதையொட்டி நமக்கு சிரமம் இருக்கிறது. ஆனாலும், இது மீனவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. இதைப் பாதுகாக்க வேண்டியது இந்தியாவுக்கும், தமிழகத்திற்கும் முக்கியமான பிரச்சினை. ஆகவே, ஏற்கெனவே நாம் தொடுத்திருக்கின்ற வழக்கை விரைந்து நடத்தி முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதுவரை தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து நிற்க முடியாது என்பதால் மத்திய அரசு, தமிழக அரசையும் சேர்த்து இலங்கை அரசோடு உடனே பேச வேண்டும். இருதரப்பு மீனவர்களை வைத்தும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மீன்பிடி உரிமையை நிலைநாட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று

2013 மே 3] [திரு. அ. சவுந்தரராசன்]

இந்தத் தீர்மானத்தின் Operative portion–ல் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை. அந்த அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து நான் அமர்கின்றேன்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ச. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துப் பறிப்பை யார் செய்தாலும் விடமாட்டேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை அரசும் இதற்குத் தப்பவில்லை என்பதையே இந்தத் தீர்மானம் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது குறித்து இரண்டு கருத்துகளை மட்டும் முன்வைக்கலாம் என்று கருதுகின்றேன். ஏனென்றால், எப்பொழுது நாம் இத்தகைய பிரச்சினைகளில் ஒன்றுபட்டு தீர்மானம் நிறைவேற்றினாலும், இந்திய அரசின் சார்பிலே அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய முடியாது என்பது அங்கே உள்ள வெளியுறவுத் துறை அமைச்சர்களின் வாடிக்கையான பதிலாக இருக்கிறது. ஆனால், ஓர் ஒப்பந்தம் என்றாலே அது புனிதமானது அல்ல. ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்யலாம். ஒரு சாராருக்கு அதனால் மிகப் பெரிய தீமைகள் விளைகின்றன என்றால், அந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்வதுதான் உலகமெங்கும் கையாளப்படுகின்ற முறையாகும்*–Unequal Treaty *என்று சொல்வார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முதல் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனியின்மீது தாங்க முடியாத அளவுக்கு நஷ்டஈடு விதிக்கப்பட்டது*–War reparations *என்று சொல்வார்கள். அதை அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கேட்டு பார்த்து, அது முடியாததனாலேயே அங்கே ஒரு ஹிட்லர் தோன்றி இரண்டாவது உலகப் போர் வந்தது. ஆகவே, ஓர் ஒப்பந்தம் தவறாக இருக்குமேயானால், அது அமைதிக்கு வழி வகுக்காது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு.*

*இதே இந்திய அரசு 1987 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ராஜீவ்–ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போட்டது. அதை இலங்கை அரசு பொருட்படுத்தவில்லையே. 26 ஆண்டுகள்*

[திரு.ச. இராமச்சந்திரன்] [2013 மே 3

ஆகின்றன. இலங்கையில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதியில் வடக்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரே மாநிலமாக அமைத்து, ஒரு மாநில அரசை உருவாக்குவோம் என்று ஒப்பந்தம் போட்டார்கள். 13–வது அரசியல் சட்டத் திருத்தம் இலங்கையிலே வந்தது. என்னவாயிற்று? அண்மையிலே அந்த நாட்டினுடைய ஜனாதிபதி அவர்கள் சுதந்திர தின உரையாற்றுகையில் அதையெல்லாம் ஒன்றுமே தர முடியாது என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ஆகவே, ஓர் ஒப்பந்தம் என்பது ரொம்பப் புனிதமானது என்று கருதிக்கொண்டு அதை மறுபரிசீலனை செய்யமாட்டோம் என்று சொல்வது சரியல்ல.

சில ஆண்டுகளுக்கு முன்னாலே, நேபாளத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் பிரசந்தா அவர்கள்கூட சொன்னார்கள். 1951 ஆம் ஆண்டு இந்திய–நேபாள ஒப்பந்தம் என்பது இந்தியாவிற்கு அதிக சாதகமாக உள்ளது, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அதை இந்திய அரசும் பரிசீலனை செய்கிறது. ஆகவே, ஒப்பந்தம் என்றால் அதை மறுபரிசீலனை செய்ய முடியாது என்றோ அல்லது ரத்து செய்ய முடியாது என்றோ சொல்வது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்பதை இந்த நேரத்திலே தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வார்கள் என்பதிலே எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு.

இன்னொன்று, எல்லைகள் என்பதே மனிதர்கள் வகுப்பதுதான். இயற்கையானது அல்ல. ஓர் இன மக்கள், ஒரு நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக்கொள்ள, வாழ்வை உறுதியாக்கிக்கொள்ள அவர்கள் ஏற்பாடு செய்துகொள்வதுதான் எல்லைகள் ஆகும். Borders are man made, not natural. இன்றைக்குக்கூட எனக்கு முன்பு எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பேசும்போது சொன்னதைப்போல பாகிஸ்தானானாலும், சீனாவானாலும் எல்லைத் தகராறு என்றால் அந்த எல்லைத் தகராறுகள் நாமாக உருவாக்கிக்கொண்டது, அவற்றைப் பேசித் தீர்க்க வேண்டும் என்று நினைக்கின்றோம். அதேபோல இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலே இருக்கக்கூடிய கடல் பகுதி இயற்கையான பகுதி. அங்கே வரையறுக்கப்பட்டிருக்கின்ற எல்லை நிரந்தரமான பிரிவை ஏற்படுத்துவதற்காக அல்ல. எல்லைகள் என்றால், அந்த

எல்லைகளை வைத்துக்கொண்டு இரு பகுதி மக்களையும் வாழவைப்பதற்காகத்தான் அந்த ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, கடலிலே எல்லையை வகுத்துவிட்டு, அந்த எல்லைப்படி இந்தப் பகுதிக்கு வரக்கூடாது என்று சொல்லி, கடற்படையை அங்கே நிறுத்தி, வருகின்ற மீனவர்களைத் தாக்குவது எந்த வகையிலே மனிதாபிமானம்? எல்லைகள் வகுப்பதே இரு பகுதி மக்களும் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், உத்தரவாதப்படுத்துவதற்கும்தான். ஆனால், அது அந்த மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கின்ற ஒரு நடவடிக்கை என்றால் அந்த எல்லைகளை மாற்றிக்கொள்ளலாம் அல்லது அந்த எல்லைகள் இருக்கின்றபோதே மீன்பிடி உரிமைகளை வழங்கலாம். ஆகவே, எல்லைகள் என்பது நாமாக மேற்கொண்டவை என்பதை இலங்கை அரசு உணர வேண்டும்.

பிற்பகல் 12–10

அண்மையிலே, இலங்கை அரசினுடைய தூதராக இந்தியாவிலே இருக்கின்றவர் ஓர் அருமையான கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது என்னவென்றால், இலங்கையிலுள்ள பெரும்பாலான சிங்களவர்களெல்லாம் இந்திய வம்சாவழியினர் என்று வடபுலத்திலே இருக்கின்றவர்களையெல்லாம் அவர் பக்கம் திருப்புவதற்காக அவர் எடுத்துச் சொன்னார். அருமை நண்பர் பழ. நெடுமாறன் அவர்களும் ஓர் அருமையான பதிலைச் சொன்னார். அப்படியானால் உங்களுக்குத் தனி நாடு எதற்கு? பேசாமல் இந்தியாவோடு சேர்ந்துவிடலாமே என்று சொன்னார். ஒருவேளை அப்படிச் சேர்ந்தால் இந்தப் பிரச்சினை தீருமோ என்னவோ, எனக்குத் தெரியாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மனதார வழிமொழிந்து என் உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீவு என்றாலே நீரில் மூழ்கியும், மூழ்காமலும் இருக்கும் ஒரு நிலப்பகுதி என்பது பொருள். கச்சத் தீவைப் பற்றிய பல உண்மைகள் பலநாள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. கச்சத் தீவைப் பற்றிய வரலாற்று நிகழ்வுகளை அலசுவதற்கும், ஆராய்வதற்கும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் சட்டமன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானம் ஒரு வாசலாக, விடியலாக அமைந்துள்ளது.

[பேரவைத் தலைவர்] [2013 மே 3

1734 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு செப்புப் பட்டயத்தில் சேதுபதி மன்னர்கள் இராஜ்ஜியத்திற்குட்பட்ட பகுதி என்று இந்திய தொல்பொருள் துறையின் அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்றுள்ளது. சேதுபதி மன்னர் நினைவாகத்தான் அந்தக் கடல் பகுதியை அனைவரும் சேது சமுத்திரம் என்று உலக அளவில் அழைக்கின்றனர். கோடிக்கணக்கான இந்து மதத்தினர் நம்பும் இராமாயண இதிகாசத்தில் ஸ்ரீராமரும், வாலியும் போரிட்ட தீவுதான் கச்சத் தீவு என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இந்தியாவின் உரிமையான கச்சத் தீவைத் திரும்பப் பெறவேண்டும் என்னும் உரிமைக் குரலை முழங்கி, அதற்கான முன் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டுவருவது நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் நீராதார உரிமையை மீட்டிருப்பது போன்றே கச்சத் தீவு விவகாரத்திலும் வெற்றி பெறுவோம் எனச் சட்டமன்றத்திலே நம் அன்னைத் திருமகள் செய்திருக்கும் பிரகடனம் தமிழக மக்களுக்கு அளப்பரிய பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் தந்திருக்கிறது.

சிங்களவனுக்கு எதிராக சீற்றம் கொண்டு, I.P.L.—ல் அம்பயரேயானாலும் அனுமதியேன் என்று அறிவித்து போர் பரணி பாடுகின்றவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு தமிழருக்கு இன்னல் விளைவித்தால் சம்ஹாரம் நிகழும் என்று குரல் கொடுப்பவர் அம்மா அவர்கள். புனிதம் மிக்க பேரவையில் புரட்சித் தீர்மானங்கள் இயற்றி போர்க் குற்ற விசாரிப்பும், பொருளாதாரத் தடையும் வேண்டும் என அனல் பறக்க ஆவேசம் காட்டி அகிலத்தையே உற்று நோக்க வைத்த அறிவுப் பெட்டகம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழரை கோடி தமிழினமே, தமிழ்த் தாயின் கர்ஜனை குரல் கேட்டு கைகூப்பி வணங்கியது. நிலத்தில் யாருக்கும் அஞ்சாத சத்திய ஆவேசத்தின் தெய்வக் குரலாய், தனது காட்டாற்று வெள்ளம் போன்ற அர்த்தம் உள்ள அறிவு சார்ந்த கருத்துகளால் உச்ச நீதிமன்றத்தில் ஒரு போராளிபோல் தொடர்ந்து செயல்வேகத்தால் 22 ஆண்டு காலம் தன்னந்தனியே போராடி, உச்ச நீதிமன்ற ஆணையைப் பெற்று, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழிலே வெளியிடும் சூழலை உருவாக்கியவர் (மேசையைத் தட்டும் ஒலி), உத்தமத் தலைவி,

பொன்னியின் செல்வி அம்மா அவர்கள். காவேரியை மீட்ட கம்பீரம், கச்சத் தீவிற்குப் போராடும் நெஞ்சுரம், மாண்புமிகு அம்மா அவர்கள். முல்லைப் பெரியாறு அணையின் உரிமையை மீட்டுத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கச்சத் தீவை நாம் மீட்காவிட்டால் எதிர்காலத்தில் தமிழகத்திற்கு இடையூறாக அமையும் என்பதை முழுமையாக உணர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைய இளைய தலைமுறையினரும், எதிர்காலத் தலைமுறையினரும் போற்றும் வகையிலே ஆக்கப்பூர்வமான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளார்கள்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தத் தீர்மானம் பொன்னெழுத்துக்களால் பதிக்கப்போகும் வெற்றிக்கு சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் வெற்றிப் படிக்கற்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தத்தில் வெல்வது எப்படி என்பதைக் கற்றுத் தந்த தாயே! உங்கள் ஆசியால் இமயத்தைத் தொட்டுவிட்டோம். இனி சிகரத்தை எட்டுவோம். மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் பெறுவோம் கச்சத் தீவை. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று என்னால் முன்மொழியப்பட்ட அரசினர் தீர்மானத்தின்மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்களும் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்திருக்கிறீர்கள்.

உலகில் பல்வேறு நாடுகளுக்கிடையே பல்வேறு பொருட்கள் குறித்து ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த சர்வதேச ஒப்பந்தங்கள் எல்லாம் இன்றளவும் நடைமுறையில் மதிக்கப்படுகின்றன; கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், 1974 ஆம் ஆண்டு இந்திய–இலங்கை ஒப்பந்தம் மட்டும் ஆரம்ப காலம் முதல் தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 3

அரசு தொடர்ந்து அவமதித்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதன் காரணமாக பாதிக்கப்படுபவர்கள் இந்திய குடிமக்களாகிய தமிழக மீனவர்கள் மட்டுமே. இலங்கைவாழ் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. தமிழர்களுக்கு மேலும் வேதனை அளிக்கக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்திய—இலங்கை நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவு பகுதியில் மீன் பிடி உரிமை வழங்கப்படவில்லை என்று இலங்கைக்கு ஆதரவாக மத்திய அரசே கூறியுள்ளதுதான்.

இலங்கை நாட்டிற்கு கச்சத் தீவை காவு கொடுக்கும் இந்திய—இலங்கை ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதற்கு முன்பே இந்தப் பிரச்சினை குறித்து பேசப்பட்டு வந்தது. கச்சத் தீவு தாரை வார்ப்பு ஒப்பந்தம் இந்திய—இலங்கை நாடுகளுக்கிடையே 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறுதியில் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பில் அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 26—6—1974 அன்றும், இலங்கையின் சார்பில் அன்றைய இலங்கை அதிபர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகே அவர்கள் 28—6—1974 அன்றும் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் பேசிய அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஸ்வரண் சிங் அவர்கள், இது குறித்து அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியிடம் விரிவாக குறைந்தபட்சம் இரண்டு முறை கலந்துரையாடப்பட்டது என்று தெரிவித்திருக்கிறார்.

இதிலிருந்து, இந்திய—இலங்கை நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு கச்சத் தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளை இந்தியா, இலங்கை நாட்டிற்கு தாரைவார்க்கப் போகிறது என்பது நன்கு தெரியும் என்ற உண்மை தெளிவாகிறது. இதுபோன்ற கருத்துரு மத்திய அரசிடம் இருப்பதை அறிந்த உடனேயே தமிழக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாநிலம் தழுவிய போராட்டத்தை திரு. கருணாநிதி நடத்தியிருக்கலாம். போராட்டம் என்று நடத்தவில்லை என்றாலும், 1960—க்கு முன்பு மேற்கு வங்க மாநிலம், பெருபாரி பகுதியை

2013 மே 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கிழக்கு பாகிஸ்தானுக்கு மத்திய அரசு அளிக்க முயன்றபோது, அதற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினைச் சுட்டிக்காட்டி, உச்ச நீதிமன்றத்திலே சட்ட ரீதியாக மனுத்தாக்கல் செய்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்ய திரு. கருணாநிதி விரும்பவில்லை. எனவேதான், *29—6—1974* அன்று செய்தியாளர்கள் அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியிடம், "கச்சத் தீவை இந்திரா காந்தி இலங்கைக்குக் கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ஜனசங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அறிவித்துள்ளாரே, உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டதற்கு, "அதுபற்றி நான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை" என்று பதில் கூறியுள்ளார் திரு. கருணாநிதி. கச்சத் தீவு காவு கொடுக்கப்பட்டதைத் தடுக்க எதையுமே செய்யாமல் மவுனம் சாதித்துவிட்டு, கச்சத் தீவு தாரைவார்க்கப்பட்ட பிறகு பெயரளவிலே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி கச்சத் தீவு பிரச்சினைக்கு மூடுவிழா நடத்தினார் திரு. மு. கருணாநிதி.

பிற்பகல் 12—20

அந்தத் தீர்மானத்தின்மீது பேசிய திரு. கருணாநிதி, "ஜூன் மாதம் 27 ஆம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தது. இப்போதும் சொல்கிறேன். இது பற்றி எந்தவிதமான சூசகமான தகவலையும் இந்த அரசுக்கு அறிவிக்கவில்லை. 27 ஆம் தேதி பத்திரிகையில் பார்த்தவுடன் பதறிப்போய் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தந்தி கொடுத்தேன்." என்று கூறியிருக்கிறார்.

ஆனால், திரு. கருணாநிதியின் தலைமையில் "டெசோ" அமைப்பின் சார்பில் 15—4—2013 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் கச்சத் தீவு குறித்த தீர்மானத்தில், "1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, கழக அரசு முதல் நிலையிலேயே அதனைக் கடுமையாக எதிர்த்தது. அதையும் மீறி ஒப்பந்தம் கையெழுத்தானபோது, குறைந்தபட்சம் தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையும், மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமையும் அந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று கழக அரசு வலியுறுத்தி அந்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது உண்மை என்பதை திரு. கருணாநிதிதான் நாட்டு

மக்களுக்கு விளக்க வேண்டும். 1974–ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசிய திரு. கருணாநிதி, "கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட செய்தியை பத்திரிகைகளில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்; பதறிப்போனேன்" என்கிறார். ஆனால், 2013–ல் கடந்த மாதம் நடைபெற்ற "டெசோ" கூட்டத்தில், ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, இவர் சொல்லித்தான் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்கிறார்! இது என்ன பித்தலாட்டம்? (மேசையைத் தட்டும் ஒலி)

எப்படியிருந்தாலும், கச்சத் தீவு பிரச்சினையில் திரு. கருணாநிதியின் செயலற்ற தன்மை காரணமாக, இரட்டை நிலை காரணமாக, தனக்கே இயல்பான கபட வேடம் காரணமாக, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

நான் முதன் முறையாக 1991–ல் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டு, "கச்சத் தீவை மீட்போம்" என்று அறிவித்தேன். கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பது தொடர்பான தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 3–10–1991 அன்று எனது அரசால் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கச்சத் தீவை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பாரதப் பிரதமரை நேரில் பல முறை வற்புறுத்திக் கூறினேன். கடிதம் மூலமும் வற்புறுத்தி இருக்கிறேன்.

"ஜெயலலிதா, கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்றாரே? ஏன் இன்னும் மீட்கவில்லை? அதை மீட்காமல் எதை மீட்டிக் கொண்டிருக்கிறார்?" என்று என்னை அடிக்கடி கேலி செய்து வந்துள்ளார் திரு. கருணாநிதி. பின்னர், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை மாநிலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தார் திரு. கருணாநிதி. நடுவில் ஓர் ஆண்டைத் தவிர, 1996 முதல் ஒரு மாதத்திற்கு முன்பு வரை, வெவ்வேறு மத்திய அரசுகளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு இருந்தார் திரு. கருணாநிதி. ஆனால், கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்காக ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. மத்திய ஆட்சியில் பங்கு கொண்ட அத்தனை ஆண்டுகள், 16 ஆண்டுகளில், திரு. கருணாநிதி எதை மீட்டிக் கொண்டிருந்தார்? என்று அவர்தான் கூற வேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2013 மே 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, "Lease in perpetuity"–அதாவது, நிரந்தரமான குத்தகை என்ற முறையிலாவது, கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமையை இந்திய மீனவர்களுக்கு மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும் என்று பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தினேன். கடிதங்கள் வாயிலாகவும் கேட்டுக் கொண்டேன். திரு. கருணாநிதியின் தயவில் மத்திய அரசு இருந்ததாலோ என்னவோ, எந்தவிதமான நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து தமிழகத்தின் முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பொறுப்பேற்றுக் கொண்டார். மத்தியில் தி.மு.க. ஆதரவுடன் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்றது. எந்த மத்திய அரசும், மாநில தி.மு.க. அரசும், 1974 ஆம் ஆண்டு கச்சத் தீவை இலங்கைக்கு தாரைவார்த்துக் கொடுத்தனவோ, அதே அரசுகள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பை வகித்தன. ஆனால், கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துக்கொண்டே சென்றன.

பிற்பகல் 12—25

இந்திய மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், (மேசையைத் தட்டும் ஒலி) பெருபாரி வழக்கினை மேற்கோள்காட்டி, கச்சத் தீவை இலங்கைக்குத் தாரைவார்த்துக் கொடுத்த 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் 'சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல' என்று உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் 2008 ஆம் ஆண்டு ஒரு வழக்கினைத் தொடுத்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாகச் சேர்த்திருந்தேன். ஆனால், திரு. கருணாநிதி தலைமையிலான அன்றைய தமிழக அரசின் சார்பில் சாதகமான எதிர் உறுதி ஆவணம் ஏதும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழ்நாடு சட்டமன்றப்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 3

பேரவையில் ஒரு தீர்மானத்தை இயற்றி தமிழக அரசின் வருவாய்த் துறையையும் இந்த வழக்கில் இணையச் செய்தேன்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தவரை கச்சத் தீவை மீட்பதற்காக சுண்டு விரலைக்கூட அசைக்காத திரு. கருணாநிதி, பல்வேறு காரணங்களுக்காக புதுப்பிக்கப்பட்ட டெசோ அமைப்புமூலம் "1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்மூலம் கச்சத் தீவை விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாக செல்லுபடியாகாது என்றும், அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும், கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதைப் பிரகடனப்படுத்த டெசோ அமைப்பின்மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது" என்றும் ஒரு தீர்மானத்தினை 15—4—2013 அன்று நிறைவேற்றி இருக்கிறார்.

கச்சத் தீவு மீட்கப்படவேண்டும், தமிழக மீனவர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்ற அக்கறை திரு. கருணாநிதிக்கு உண்மையாகவே இருந்திருந்தால், இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என மத்திய அரசுக்கு எதிராக நான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோதே தமிழ்நாடு அரசையும் அதில் இணைத்துக்கொண்டு கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையெனில், என்னுடைய கோரிக்கைக்கு வலு சேர்க்கும் விதமாகவாவது மாநில அரசின் சார்பில் எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்திருக்கவேண்டும். ஆனால் இப்படி எதையுமே செய்யாமல், மாநில அரசு ஒரு 'Proforma Respondent' தான் என்பதால், மத்திய அரசு எந்தவித எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்கிறது என்று பார்த்துவிட்டு, பின்னர் மாநில அரசு எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்து கொள்ளலாம் என்ற மழுப்பலான முடிவை எடுத்தார் அப்போதைய தமிழக முதல்வர் திரு. கருணாநிதி. குறைந்தபட்சம் தான் தாங்கிப் பிடித்திருந்த மத்திய அரசை வலியுறுத்தி தமிழக மீனவர்களுக்குச் சாதகமான வகையில் மனுத் தாக்கல் செய்யச் சொல்லி இருக்கலாம். ஆனால், அவ்வாறு எதையும் திரு. கருணாநிதி செய்யவில்லை. மத்திய அரசுக்கு திரு. கருணாநிதி அழுத்தம் கொடுக்காததன் காரணமாக, 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டியது இல்லை என்று தெரிவித்து,

2013 மே 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]
என்னுடைய ரிட் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்துள்ளது.

இதன் பின்னர், நான் மூன்றாவது முறையாக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 8–6–2011 அன்று இந்த மாமன்றத்தில் தமிழக அரசின் வருவாய்த் துறையையும் கச்சத் தீவு வழக்கில் இணைத்துக்கொள்ளும் வகையிலான தீர்மானத்தை நிறைவேற்றினேன். இந்த வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறை இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னராவது மத்திய அரசை திரு. கருணாநிதி வற்புறுத்தி இருக்கலாம் அல்லது இந்த வழக்கில் தி.மு.க.–வை அப்போதே இணைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், இப்போது 'டெசோ'மூலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்திருப்பது யாரை ஏமாற்ற என்பது தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் மீது குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கச்சத் தீவு பிரச்சினையில் திரு. கருணாநிதி எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிய வேண்டும், இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் நான் இங்கே வேதனையுடன் குறிப்பிடுகிறேன்.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஏழு முறை இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்களில் தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் இலங்கைக் கடற்படையினரால் நாசமாக்கப்பட்டன. இவர்களில் 30 மீனவர்கள் இன்னமும் இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்படவில்லை. இது தவிர, ஐந்து தமிழக மீனவர்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இலங்கைச் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், தமிழக மீனவர்களைக் காக்க, கச்சத் தீவினை மீட்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதால், கச்சத் தீவினை மீட்கும் தீர்மானத்தினை நான் முன்மொழிந்துள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*மீனவர்களின் நலன் காக்கும் இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை.*

*தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

## 4. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

—

### (அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*